ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

19.06.2025

1. ஞான ஆனந்தக் கடலே
ஞான பண்டிதனே வேலவா
ஞான தேசிகனும் உமை போற்றி
ஞாலமதில் விசுவாவசு மிதுன திங்கள்

2. திங்களிலே முதல் குருவார அருளாசி
தொண்டர்களோடு உலகோர்கள்
ஓங்கார ஞானமடைய வேண்டி
ஓதிடுவேன் அரங்கனும் ஆசிதனை

3. ஆசியுண்டு என் நாமம் போற்றி
அணுகி பிரணவக் குடில் வர
ஆசியோடு அனுகூலம் தானும்
அனைவருக்கும் உண்டு உண்டு

4. உண்டான ஞானிகள் பூசையே
உயர் பூசையெனக் கலந்து
தொண்டென பிரணவக் குடிலின்
தொடர் தருமப் பணியில் உதவி

5. உதவியே கருமவினை அகற்றும்
உயர் அன்னதானம் வழியில்
ஆதரவை தந்து பொருளுதவி
அளவிலா வண்ணம் செய்து

6. செய்துமே ஞானிகளிடத்தில்
சிறந்தோர் எனும் அடையாளம்
அய்யமற உலகோர் அணுகிப்பெற
அரங்கமகான் என் வழிகாட்டல்

7. வழிகாட்டல் உறுதி ஆகியே
வாழும் காலமே சகலவகை
தெளிவும் ஞானமும் கூடி
தேட்டு தனவளம் அடைவதுடன்

8. அடைவதுடன் தன் பிறவி நோக்கம்
அறிவுத் தெளிவு தன்னை
தடையற கண்டுத் தேறி
தரும பலம் குருவருள் பலம்

9. பலம் கூடி ஞானிகள் காட்டும்
பரிபக்குவமும் தேறி நின்று
வலம் வருவீர் கலியுகத்தில்
வல்லமையான ஞானிகளாகவே

10. ஆகவே சைவநெறி போற்றி
அன்னதான சேவை ஆற்றி
மகான்களின் நாமசெபத்தை
மனமுவந்து செய்து வந்தாலே

11. வந்தாலே போதுமப்பா உலகில்
வடிவேலனும் தேடி வந்து வாசி
சிந்தை மகிழ நடத்தி உங்களை
சித்தர்களாக்கி சித்திபுரிவாரப்பா

அரங்கமகான் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி